# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
# சட்டபீடம்
# சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV, 2020
# வரிச்சட்டம்

(மூன்று மணித்தியாளம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை 07

**எவையேனும் நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

இவ்வினாத்தாள் ஐந்து பக்கங்களில் ஏழு வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. ஒரு இலகுவான வரி முறையானது வரிசெலுத்துனருக்கு தமது உண்மையான அல்லது திட்டமிடப்பட்ட பரிவர்தனைகளின் வரி விளைவுகளை திறம்பட விளங்கிக்கொள்ள உதவுவதுடன் தவறுகளைக் குறைத்துக் கொள்ளவும் மற்றும் குறித்த வரிமுறை மீதான மதிப்பினை அதிகரிக்கவும் வழிகோலும். வரிசெலுத்துனர் குறித்த விதிகளை விளங்கிக்கொள்வதுடன் அவற்றைச் சரியாகவும் செலவு குறைந்த முறையிலும் இணங்கியொழுகக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

   இலங்கையின் தற்போதைய வரிச்சட்ட முறைமையின் கீழ் 'இலகுத்தன்மை,வசதி மற்றும் ஸ்திரத்தன்மை' ஆகிய கொள்கைகள் எந்த அளவிற்குப் பின்பற்றப்பட்டுள்ளன என்பதனை விமர்சன ரீதியான மதிப்பீடு செய்க.

   (25 புள்ளிகள்)

2. சுமித் பெர்ணான்டோ என்பவர் மென்பொருள் நிறுவனமொன்றின் உரிமையாளர் ஆவார். அவர் 2019/2020ம் வரிமதிப்பீட்டாண்டில் பின்வரும் செலவுகளுக்கு உட்பட்டதுடன் அவரது வருமானத்தினை கணக்கிடும் பொழுது குறித்த செலவுகளைக் கழிக்கவும் விரும்புகின்றார். அவருக்கு எவ்வாறு ஆலோசனை வழங்குவீர்?

   அ) நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் மையப்படுத்தும் பெருமுகக் கணணியொன்றினை (mainframe computer) நிறுவுவதற்கு ஏற்பட்ட செலவு ரூபா.1,000,000/=. குறித்த நிறுவுகையானது பத்து வருடங்கள் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

   ஆ) தனிப்பட்ட விபரங்களைப் பாதுகாப்பதற்கான புதிய மென்பொருளொன்றின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ரூபா.250,000/= செலவிடப்பட்டது.

   இ) தனது வரிவிபரத் திரட்டுக்களை (tax returns) தாக்கல் செய்யத் தவறியதன் பின்னராக மேற்கொள்ளப்பட்ட வரி மதிப்பீட்டினை கேள்விக்குட்படுத்த ஏற்பட்ட சட்டச்செலவு ரூபா.500,000/=

ஈ) கணணிகளைத் தரமுயர்த்தவும் அலுவலக வளாகத்தினை புதுப்பிக்கவும் ரூபா.75,000/= செலவு செய்யப்பட்டது.

உ) வருடாந்த ஊழியர் சுற்றுலாவிற்காக ரூபா.100,000/= செலவு செய்யப்பட்டது.

(25 புள்ளிகள்)

3. (அ) மற்றும் (ஆ) பகுதிகளில், 2019/2020 வரிமதிப்பீட்டாண்டில் பின்வரும் நிகழ்வு ரீதியான சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற வருமானவரி பொறுப்புக்களை பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

அ. திரு.சஜித் பெரேரா என்பவர் புறக்கோட்டையில் அமைந்துள்ள Suntel Telecom நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் பணிபுரிகின்றார். அவர் சர்வதேச அழைப்புக்கள் பகுதியின் (call division) கிளை முகாமையாளராவார். அவரின் மேற்பார்வையின் கீழ் இருபத்தைந்து ஊழியர்கள் பணிபுரிகின்றார்கள். Suntel நிறுவனமானது அவருக்கு ரூபா.300,000/= சம்பளத்தினைத் தவிர, மோட்டார் வண்டியொன்றுடன் ரூபா.100,000/= க்கான எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அவரது வீட்டு வாடகையாக ரூபா.75,000/= யும் வழங்குகின்றது. அவரது சேவையானது 24 மணிநேரமும் பொறுப்புக் கூறவேண்டிய அவசிய தன்மையானது என்பதனால், குறித்த நிறுவனம் அவரது குடும்பத்தினரின் பாவனைக்காக மற்றுமொரு மோட்டார்வண்டியையும் வழங்கியுள்ளது. சமீபத்தில் திரு.சஜித் பெரேரா திடீர் உடல்நலக்குறைவினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அதற்கு ஏற்பட்ட செலவான ரூபா.150,000/= இனை நிறுவனம் அதன் நலன்புரி நிதியிலிருந்து செலுத்தியது. மேலும், 2019ம் ஆண்டின் வருட இறுதி மதிப்பீடுகளானவை திரு.சஜித் பெரேராவின் பிரிவானது அனைத்துப் பிரிவுகளிலும் அதிக இலாபத்தினை ஈட்டியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது. Suntel நிறுவனமானது அவருக்கு ரூபா.500,000/= த்தினை அவரது செயல்திறனுக்காக வழங்கியது.

(12.5 புள்ளிகள்)

ஆ. கையடக்கத் தொலைபேசி வியாபாரியான ராஜா என்பவன், ஹோமாகம பொதுச்சந்தையில் கடையொன்றினை சொந்தமாக வைத்திருந்தான். அவன் குறித்த வியாபாரத்திலிருந்து ரூபா.75,000/= இனை மாதாந்த வருமானமாக ஈட்டினான். அவனது வியாபாரத்தினை விரிவுபடுத்தும் நோக்குடன் ஹோமாகமவில் அவன் ஒரு முகவர் தபால் நிலையத்தினை ஆரம்பித்தான். அவன் தனது புதிய கடையில் வெளிச்செல்லும் தொலைபேசி அழைப்பு வசதிகள், மின்னஞ்சல் வசதிகள், தொலைநகல் வசதிகள் மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கினான். குறித்த சேவைகள் வழங்கல் மூலமாக அவன்

பெற்றுக்கொண்ட கட்டணங்கள் மூலமாக அவனது மாதாந்த வருமானமானது மூன்று மடங்காகப் பெருகியது. அவன் ஹோமாகம வர்தக சங்கத்தின் அங்கத்தவர்களில் சிறந்த வளர்ந்துவரும் முதலாளியாக விளங்கியதனால் ரூபா. 250,000/= இனைச் சன்மானமாகப் பெற்றான். அவன், பல மாதங்களிற்குப் பின்னர் இரு நவீன புகைப்பட நகல் இயந்திரங்கள் மற்றும் அலுவலக தளபாடங்கள் என்பவற்றை முறையே ரூபா.150,000/= மற்றும் ரூபா.50,000/= ற்கு விற்பனை செய்தான்.

(12.5 புள்ளிகள்)

4. (அ) மற்றும் (ஆ) ஆகிய இரு பகுதிகளிற்கும் விடையளிக்குக.

அ. "மூலதன ஆதாய வரி" மற்றும் "முதலீட்டு வருமானம்" என்பனவற்றைப் பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் வேறுபடுத்தி, ஒவ்வொன்றினதும் தனித்துவமான பண்புகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(10 புள்ளிகள்)

ஆ. 'முதலீட்டு வருமான வரியானது, நுகர்வோர் மீதுள்ள அநாவசியமான வரிச்சுமைகளை குறைக்க உதவுகின்றது என்பதோடு , அவ்வாறு இல்லையெனில் அவர்கள் செல்வந்தரைவிட ஏழைகளை பாதிப்புக்கு உட்படுத்தும் அதிகளவிலான வரிகளைப் பல்வேறுவித மறைமுக வரி வடிவங்களில் செலுத்த வேண்டியிருக்கும்'.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? முதலீட்டு வருமானம் மீது பொறுப்புக்களை விதிக்கும் 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிரைச் சட்டத்தின் ஏற்பாடுகளை, குறிப்பாக "மூலதனச் சொத்து (Investment asset)" , "சொத்தின் ஆகசெலவு (Cost)", "பிரதிபலன்கள் (consideration)" மற்றும் "தேறிப்பெறுகை (Realization)" என்பவற்றின் வரைவிலக்கணங்களை ஆராய்வதன் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(15 புள்ளிகள்)

5. திரு.சங்கர் மற்றும் Giant (Pvt) Ltd ஆகியன S&G Enterprise எனும் பங்குடைமை வியாபாரத்தின் சம பங்குதாரராவர். இரு பங்குதாரரும் 2019/20ம் வரிமதிப்பீட்டாண்டில் பின்வரும் வருமானங்களைப் பெற்றிருந்தார்கள்;

அ) S&G Enterprise பங்குடைமை நிறுவனம் மொத்த வியாபார வருமானமாக ரூபா.1,000,000/= யும் வாடகை வருமானமாக ரூபா.500,000/= யும் கொண்டுள்ளது. 2020ம் ஆண்டு மார்ச் மாதம் மேற்குறித்த வருமானத்தில் திரு.சங்கர் மற்றும் Giant (Pvt) Ltd ஆகிய இருவரும் சமனான பங்குகளைப் பெற்றனர். இருப்பினும், S&G Enterprise பங்குடைமை நிறுவனமானது பங்குதாரரின் மொத்த வருமானத்தில் 8% த்தினை பிடித்துவைத்தல் மூலம் செலுத்தப்படற்பாலதான வரியாக (withholding tax)

பங்குதாரரின் மொத்த வருமானத்திலிருந்து கழித்து அதனை இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தியது

ஆ) இதற்கு மேலதிகமாக திரு.சங்கர் ரூபா.800,000/= ஊழிய வருமானமாகவும் மூலதனச்சொத்தின் தேறிப்பெறுகை வருமானமான ரூபா.150,000/= மற்றும் பங்குலாப வருமானமான ரூபா.50,000/= என்பவற்றை உள்ளடக்கியதான ரூபா.200,000/= மூலதன வருமானத்தினையும் பெற்றிருந்தான். திரு.சங்கர் அங்கீகாரமளிக்கப்பட்ட தரும நிறுவனமொன்றிற்கு ரூபா.200,000/= பணமாக நன்கொடையொன்றினையும் செய்திருந்தார்.

இ) Giant (Pvt) Ltd ஆனது குறித்த வரிமதிப்பீட்டாண்டில், S&G Enterprise பங்குடைமை நிறுவத்திடமிருந்து பெற்ற ரூபா.750,000/= வியாபார வருமானம் உள்ளடங்கலாக ரூபா.2,500,000/= த்தினை மொத்த வருமானமாகப் பெற்றது. Giant (Pvt) Ltd ஆனது ரூபா.1,000,000/= பெறுமதியுள்ள போனஸ் பங்குகளைத் தனது வருமானத்திலிருந்து தனது அப்போதுள்ள பங்குதாரருக்கு வழங்கியது.

ஒவ்வொரு தரப்பினரதும் வருமானவரிப் பொறுப்புக்களை ஆராய்வதுடன் பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களது செலுத்தப்பட வேண்டிய வரியினைக் கணக்கிடும்போது கிடைக்கக்கூடிய நிவாரணங்களை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பில் அறிவுரை வழங்குக.

(25 புள்ளிகள்)

6. **(அ) அல்லது (ஆ)** பகுதிக்கு விடையளிக்குக.

அ) "வரிவிபரத்திரட்டினை தாக்கல் செய்யவேண்டிய தருணத்தில் தாக்கல் செய்வதற்கு தவறும் வரிசெலுத்துனர் நியதிச்சட்டத்தினால் கடுமையாகத் தண்டிக்கப்படுவதுடன் நிர்வாகச் செயல்முறைகளினால் வழங்கப்படுகின்ற சாதாரண பாதுகாப்புக்கள் கூட மறுக்கப்படுகின்றது"

2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை மதிப்பீடு செய்க.

ஆ) ஒருவரின் வரிப்பொறுப்புக்களை அது செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு முன்னராகவே தவிர்ப்பதானது முற்றிலும் சட்டரீதியான செயற்பாடாயினும், இறைவரித்திணைக்களமானது வெற்றிடங்கள் உருவாகின்ற போது அவற்றினை மூடுவதன் மூலம் தொடர்ச்சியாக குறித்த விடயத்தில் தலையீடு செய்கின்றது.

அவ்வாறானதான முக்கிய ஏற்பாடுகள் மற்றும் முறைகளினை ஆதாரமாகக் கொண்டு, இறைவரித்திணைக்களத்தின் பார்வையில் வரித் தவிர்ப்பு திட்டங்களை விமர்சிக்குக.

(25 புள்ளிகள்)

7. (அ) மற்றும் (ஆ) ஆகிய இரு பகுதிகளிற்கும் விடையளிக்குக.

**அ)** "வரிசெலுத்தும் காலப்பகுதியொன்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டொன்றைக் கோப்பிட்டுள்ள சுயவரிமதிப்பீட்டு வரிசெலுத்துநர் ஒருவர், இச் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும், எந்தவரி செலுத்தும் காலப்பகுதிக்கு விபரத்திரட்டு தொடர்புபடுகின்றதோ அந்தக் காலப்பகுதிக்காக (இல்லாத தொகை ஒன்று உட்பட) விபரத் திரட்டில் தரப்பட்டவாறு செலுத்தப்படற்பாலதான வரித்தொகையின் வரிமதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும் (பிரிவு 132, 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிரைச் சட்டம்)

வரிவிபரத்திரட்டு மற்றும் சுயவரிமதிப்பீட்டு நடைமுறையினை பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

(12.5 புள்ளிகள்)

**ஆ)** "மீள்பரிசீலனையின் நிருவாக மீளாய்வின் முடிபொன்றினால் இன்னலுற்ற ஆளொருவர் அதன் முடிவிற்கெதிராக வரிமேன்முறையீடுகள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்". (பிரிவு 140, 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிரைச் சட்டம்)

2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிரைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டு செயல்முறையினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(12.5 புள்ளிகள்)

***********************************************